கூட்டுறவுத் துறையில் செயல்படுகின்றன. அதைப்போலவே பல பொதுத்துறையிலும் செயல்படுகின்றன. கூட்டுறவுத் துறையில் செயல்படும் சேலத்தை அடுத்த மோகனூர் சர்க்கரை ஆலையும் மற்றும் பொதுத்துறையில் பெரம்பலூர் சர்க்கரை தொழிற் சாலையும் இத்தகைய ''எரி சாராயத் தொழிற்சாலையை'' அமைக்க இரண்டு விண்ணப்பங்களைப் போட்டு மத்திய அரசின் ''லெட்டர் ஆப் இன்டென்ட்'' கூட வந்துவிட்டும் தமிழக அரசின் அனுமதி கிடைக்காமல் காலதாமதமாவது அரசுக்குத் தெரியுமா? காலதாமதத்தைத் தவிர்த்து இரண்டு ஆலைகளையும் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அத்தகைய கோரிக்கைபற்றி மனு எதுவும் வந்து அது அனுமதிக்கப்படுவதில் கால தாமதம் எதுவும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அரசே இத்தகைய எரி சாராய வடி சாலையைத் துவக்குகிற நோக்கம் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்,

1985-86-ல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இலாபம்

38—(*வினா எண். 10304) **திரு மா. மணிமாறன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 1985–86-ல் பெற்ற இலாபம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கை முடிக்கப்படாத கணக்குகளின் படி, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 1985-86-இல் சுமார் எழுபத்தைந்து லட்சம் ரூபாய் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

திரு. மா. மணிமாறன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசாங்கம் சாராயக் கடைகளை ஏலம் விட்டதில் கிடைத்த லாபம் எவ்வளவு? 1985–86 ஆம் ஆண்டில் தமிழக அரசே சாராயக் கடைகளை நடத்தியதால் ஏற்பட்ட லாபம் எவ்வளவு? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது இரண்டுக்கும் ஏற்பட்ட வித்தியாசம் தானா அது? அப்படியென்றால் 1984–85 ஆம் ஆண்டில் எவ்வளவு லாபம் கிடைத்தது, 1985–86 ஆம் ஆண்டில் எவ்வளவு லாபம் கிடைத்தது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கு வார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டில் லாபம் இல்லை. ஆனால் 1985-86 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தின் மூலமாகச் சம்பாதிக்கப்பட்ட லாபத்தில் சாராயத்தின் மீது கூடுதல் விற்பனை

1986 நவம்பர் 17]

வரி என்பதன் பேரால் ரூ.8½ கோடியும், மது வகை மீது கூடுதல் விற்பனை வரி என்பதன் பேரால் ரூ.9 கோடியும் அரசுக்குச் சேர்ந்திருக்கிறது. இது போக ரூ. 75 லட்சம் 1985-86 ஆம் ஆண்டில் லாபம் கிடைத்திருக்கிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டில் தனியார்கள் ஏலம் எடுத்து விட்டு அவர்கள் அதற்குரிய பணத்தை அரசுக்குச் செலுத்தாமல் சால்ஜாப்பு செய்து அரசாங்கத்தை ஏமாற்றி, சாராயத்தை விற்றுக் கொண்டிருந்தார்கள். அதனால் அரசாங்கத்திற்கு குறைந்த வருவாய் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு கடைகளை ஏலம் எடுக்காமல் தவறான முறைகளைப் பயன்படுத்தி தனியார் சாராயம் விற்பனை செய்து லாபம் அடைகிறார்கள். எனவே அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்து அதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராய விற்பனை நடத்துவதைத் தடுப்பதன் மூலம் கடந்த மாதம்—முந்தைய மாதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது—அரசாங்கத்திற்கு ஒரு கோடி ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுத் துறையில் பட்டாசுத் தொழில்.

39—(*வினா எண். 4870) திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டாசுத் தொழிலை அரசே ஆரம்பித்து அதனை ஏற்றுமதி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாசு வெடிப்பதைப் போல் பதில் வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அது புஸ்வாணம் போல் இருந்து விட்டது. இருப்பினும் நம்பிக்கை ஒளியை எதிர்பார்க்கிற வகையில் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். தமிழகத்தில் உற்பத்தியாகும் பட்டாசுகள் இந்தியாவில் மட்டுமல்லாமல், அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. சாத்தூர், சிவகாசி, கோயில்பட்டி போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் பெரும்பாலும் பட்டாசு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே இந்த மக்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து கூட்டுறவு சங்கங்கள் அமைத்து அதன் மூலமாக பட்டாசுத் தொழிலை ஊக்குவிக்கும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.